# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1991/52 - 2016 නොවැම්බර් මස 04 වැනි සිකුරාදා - 2016.11.04

*1991/52 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 7/2001.*

**1968ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டம்**

*1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மங்கள சமரவீர, பா. உ.,
வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு 01,
2016, நவெம்பர் 3.

**ஒழுங்குவிதிகள்**

2012 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதிய 1760/40 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகள் இத்தாய் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :-

(1) அவற்றின் 2 ஆம் ஒழுங்குவிதிக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"2. பயங்கரவாதத்தை முறியடிப்பதற்குப் பரந்தளவிலான செயல்நுணுக்கங்களையும், குறிப்பாகத் தலிபான் எனவறியப்படுவதும், (ஆப்கானிஸ்தானின் இஸ்லாமிய எமிரேட் எனவும் தன்னை அழைத்துக் கொள்வதுமான) ஆப்கான் குழு (ISIL மற்றும் தா' எஷ் எனவும் அறியப்படும்) ஈராக்கிய மற்றும் லெவன்ட் இஸ்லாமிய அரசு மற்றும் அல் கைதா என்பவற்றுக்கெதிராக விதிக்கப்படவேண்டிய வழிமுறைகளையும் எடுத்துக்கூறுகின்ற ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் 1267 (1999) என்பதும், மற்றும் 1526 (2004), 1617 (2005), 1822 (2008), 1904 (2009), 1988 (2011), 1989 (2011) மற்றும் 2253 (2015) என்பனவுட்பட்ட அடுத்துப்பின்னரான தீர்மானங்களின் மூலமும் வேறேதேனும் அடுத்துப்பின்னரான தீர்மானத்தின் மூலமும் தீர்மானத்தின் தடைசெய் தொகுதிக்கான திரிபுபடுத்துகைகளும் வலுப்படுத்துகையும், (இதனகத்துப்பின்னர் "பெயர்குறிக்கப்பட்ட ஆள்" எனக் குறிப்பீடு செய்யப்படுபவரும்), தடைசெய் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட "திரட்டிய நிரலில்" அவரது பெயர் காணப்படுகின்றவரும், தடைசெய் குழுவினால் பெயர் குறிக்கப்பட்டவாறு தலிபானுடன், ISIL லுடன் (தா' எஷ்) அல்லது அல்- கைதாவுடன் இணைந்துள்ளவருமான அல்லது இணைந்துள்ளதுமான எவரேனும் இயற்கை அல்லது சட்ட ஆளுக்கு, குழுவினருக்கு அல்லது ஏதேனும் உருவகத்துக்குத் தடைசெய் வழிமுறைகளை ஏற்புடையனவாக்குவதற்கான கடப்பாட்டுத் தொடரை ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளின் மீது சுமத்துகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவை, ஐக்கிய நாடுகள் சபையினது பட்டயத்தின் VII ஆம் அத்தியாயத்தின் கீழ் செயலாற்றி, 1999, ஒற்றோபர் 15 ஆந் திகதியன்று தீர்மானம் 1267 (1999) என்பதை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.";

(2) பதினேழாம் ஒழுங்குவிதியில், "தடைசெய் குழு" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தினது (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(அ) ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானங்கள் 1267 (1999), 1989 (2011) மற்றும் 2253 (2015) என்பவற்றைப் பின்பற்றித் தாபிக்கப்பட்ட குழு, (ISIL மற்றும் தா' எஷ் எனவும் அறியப்படும்) ஈராக்கிய மற்றும் லெவன்ட் இஸ்லாமிய அரசு அல்- கைதா மற்றும் இணைந்துள்ள தனியாட்கள், குழுவினர், பொறுப்பு முயற்சிகள், உருவகங்கள் என்பவற்றுக்கான மற்றும் என்போருக்கான தடைகள் தொடர்பான பொறுப்பைக் கொண்டுள்ள 1267/1989/2253 ISIL (தா' எஷ்) மற்றும் அல்- கைதா தடைசெய் குழு;".

*11 - 943*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.